**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Rajendran |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பல்லடம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.09.2019 ம் தேதி மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது உடுமலை பிரணவ் ஆர்த்தோகேர் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பழநி வட்டம், முத்தநாயக்கன்பட்டி அஞ்சல் மிடாப்பாடி கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் தண்டபாணி வயது 54 என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 197/2019 இதச பிரிவுகள் 279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் மற்றும் புகாரை இணைத்து நீதிமன்றத்திற்கும் மற்றும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எனக்கு இண்டிமேசன் எத்தனை மணிக்கு கிடைத்து என்று வழக்குக் கோப்பில் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். பெட்ரோல் பங்க் செல்வதற்காக இடது பக்கம் இருந்து வலது பக்கமாக சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்டவர் தன்னுடன் உறவினர்கள் யாரும் உடன் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று கொடுக்கப்பட்ட பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.12 19:29:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்